## ரூ.744.6 கோடி அடையாறு நதிக்காக ஒதுக்கீடு! கூவம் நதியை மீட்டெடுக்கும் முயற்சிக்கு மீண்டும் புத்துயிர்!

# சென்னை நதிகளை மீட்டுருவாக்கம் செய்யும் ‘திராவிட மாடல்’ அரசு!

## ‘ஒன் ரிவர், ஒன் ஆபரேட்டர்’ திட்டத்தின் கீழ் புதிய நிறுவனம் தொடங்க திட்டம்!

சென்னை. நவ. 20 -

**சென்னை நகருக்குள் பாயும் சமூக - சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த நதிகளை மறுசீரமைக்க தமிழ்நாடு அரசு பல்வேறு முனைப்புகளை மேற்கொண்டுள்ளன. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கி, அந்த அறக்கட்டளையின்கீழ் சென்னை நதிகள் மறுசீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு மீட்டுருவாக்கும் பணிகள் வேகம் எடுத்துள்ளன.**




சென்னையில் ஓடும் கூவம் ஆற்றில் 1940-கள் வரையிலும்கூட தெளிந்த நல்ல நீர் ஓடியது. சென்னையின் அபரிமிதமான வளர்ச்சி ஒரு ஆற்றை கழிவுநீர் கால்வாயாக மாற்றிவிட்டது. இன்று கூவம் என்றால் ஆறு என்பது மறந்து துர்நாற்றம் நிறைந்த கழிவு நீர் கால்வாய்க்கு உதாரணமாகவும் திகழ்கிறது. அவ்வப்போது, கூவம் நதியை மீட்டெடுக்கும் முயற்சியை சென்னை மாநகராட்சியும் தமிழக அரசும் மேற்கொண்டு வருகின்றன. ஆனால், கூவம் எப்போது ஒரு நதியாக மீண்டும் மீட்டு எடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் நீண்டநாள் கனவாகவே இருந்து வருகிறது.

கூவம் நதியை சீரமைத்து மீட்டெடுக்க, 2006-2011 திமுக ஆட்சியில் துணை முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் இருந்தபோது, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையுடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அப்போதைய மேயர் மா. சுப்பிரமணியன் முயற்சியில் அமெரிக்க சான் ஆண்டனியோ மாகாணத்துடன் சென்னை மாநகராட்சி நீர் நிலைகள் மீட்டெடுத்தல் தொடர்பாக சகோதர ஒப்பந்தமும் கையெழுத் தானது. பின்னர் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இவை அனைத்தும் கிடப்பில் போடப்பட்டன. மீண்டும் தி.மு.க. தலைமையிலான அரசு பொறுப்பேற்றதும் நதிகளை சீரமைக்கும் பணிகளை மேற்கொண்டது.

குறிப்பாக, சமூக-சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த நதிகளை மீட்டுருவாக்க, மறுசீரமைக்க தமிழ்நாடு அரசு சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கியது. கடந்த 30 ஆண்டுகளாக அடையாறு நதியில், கட்டுமானக் கழிவுகள் முதல் குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் வரை பலவும் கொட்டப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு உள்ளது.

இந்நிலையில், நகருக்குள் பாயும் சமூக -சூழலியல் முக் கியத்துவம் வாய்ந்த நதிகளை மறுசீரமைக்க தமிழ்நாடு அரசு சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கியது. அந்த அறக்கட்டளையின்கீழ் சென்னை நதிகள் மறுசீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. அடையாறு நதிக்காக இந்தத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட 744.6 கோடியில், இதுவரை 7453.1 கோடி நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதாக 4 அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ், அடையாற்றுக் கரையோரப் பகுதிகளில் இருந்து 8,891 மில்லியன் டன் திடக்கழிவுகளையும், 3,505 மில்லியன் டன் குப்பைகளையும் கற்றியுள்ளதாக சென்னை நதிகள் மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து பசுமைத் தீர்ப்பாயத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை கூறுகிறது.

அடையாறு நதி மறுசீரமைப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட நிதியில் முதல்கட்டப் பணிகளில் ஒன்றாக, அடையாறு நதியின் எல்லைகளை வரையறை செய்துள்ளோம். இந்தப் பணியின் கீழ், ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இருந்து இதுவரை 5,122 பேர் இடம் மாற்றப்பட்டுள்ளனர். கூடுதலாக, 4,367 பேரை இடம் மாற்றம் செய்ய திட்டமிட்டுள்ளோம்.

மேலும், பொதுப்பணித்துறை தகவல்களின்படி, திரு.வி.க. பாலம் முதல் கோட்டூர்புரம் பாலம் வரையிலான 2,353 மீட்டர். நீளத்திற்கும், கோட்டூர்புரம் பாலம் முதல் சைதாப்பேட்டை பாலம் வரையிலான 2,892 மீட்டர் நீளத் திற்கும் நதியில் வண்டல் மண் எடுக்கப்பட்டுள்ளது. நதியோரம் 650 மீட்டர் நீளத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது.

அதோடு, ஜாஃபர் கான் பேட்டை பாலம் முதல் மணப்பாக் கம் தடுப்பணை வரை 3,334 மீட்டர் நீளத்திற்கு வண்டல் எடுக்கும் பணிகளும் 500 மீட்டர் நீளத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக் கும் பணிகளும் முடிக்கப்பட் டுள்ளதாக பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை உறுப்பினர் கூறியதாவது: -

நதிகள் மறுசீரமைப்பைப் பொறுத்தவரை, மிக முக்கிய மான பணி கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதுதான். கடலோர பாது காப்பு மண்டலத்தின் அனுமதி வாங்கி, அதற்கென குறிப்பிட்ட திட்டம் வகுத்துப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். ஆனால், மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் மட்டுமே முகத்துவாரப் பணிகளை மேற் கொள்ள அனுமதி வழங்கப்படுகி றது. பங்குனி மாதத்தில் ஆமை முட்டையிடும் காலம் உள்பட பல் வேறு காரணங்களுக்காக மற்ற காலங்களில் அனுமதி வழங்கப்படுவதில்லை. இந்த 3 மாதங்களில் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்துள்ளோம். தற்போது வட கிழக்குப் பருவமழையின்போது ஆற்றில் நீரோட்டம் எப்படி இருக்கிறது என்ற விஷயங்களை ஆய்வு செய்து, தரவுகளைச் சேகரித்த பிறகு, அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தப் புதிய திட்டத்தின்கீழ், அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரை, பல்வேறு இடங்களில் கால்வாய்கள் அமைத்து கழிவுநீரை சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. பிறகு அங்கு சுத்திகரிக்கப்பட்ட பின்னரே, அந்த நீர் ஆற்றில் திறந்து விடப்படும்.

இப்போதுள்ள கட்டமைப்புகளில் நாளொன்றுக்கு 80-90 எம்.எல்.டி வரையிலான கழிவு நீர் சுத்திகரிக்கப்படுகிறது. ஆனால், கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களின் பணிகள் முடிவடைந்த பிறகு, சுமார் 200 எம்.எல்.டி. வரையிலான கழிவுநீரைச் சுத்திகரிக்க முடியும். அடையாறு நதிக்கான இந்தப் புதிய திட்டத்தின் பணிகள் நிறைவடையும்போது, நதிநீரின் தரம் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அளவீடுகளின்படி, “ஸ்கேல் 4” என்ற அளவில் இருக்கும்.

அதாவது, “அவற்றைக் குடிக்க முடியாது என்றாலும், அவற்றில் உயிர்ச்சூழல் ஆரோக்கியமாக இருக்கும் அளவுக்கு ஆற்றின் தரம் உயர்ந்திருக்கும்.

மேலும் சென்னை புறநகர்ப் பகுதிகளான, பம்மல், அனகாபுத்தூர் ஆகிய பகுதிகளில் நிலத்தடி கழிவுநீர் கால்வாய்கள் அமைத்ததன் மூலம், அங்கிருந்து ஆற்றில் கலக்கும் கழிவுநீரின் அளவு குறைந்துள்ளது.‘

சென்னை மாநகராட்சிக்கு உள்ளேயே சில இடங்களை அடையாளம் கண்டு, மெட்ரோ நீர் வாரியத்தின் மூலமாக, கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 761 கோடி செலவில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தச் சுத்திரிகரிப்பு நிலையங்களில் சில செயல்பாட்டிற்கு வந்துவிட்டன. மேலும் சில, இந்த ஆண்டுக்குள் செயல்பாட்டிற்கு வந்துவிடும். இவற்றின் மூலம் அடையாறு நதியில் கலக்கும் கழிவு நீரின் அளவு குறைக்கப்படும். அடுத்தகட்டமாக “ஒன் ரிவர், ஒன் ஆபரேட்டர்” என்ற திட்டத்தின் கீழ், ஒரு புதிய நிறுவனம் தொடங்கப்பட்டு, நதி மறுசீரமைப்புக்கான அனைத்துப் பணிகளும் அதன்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது என்றார்.

நன்றி : **தினகரன்**
18.11.2024

## ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட உச்சநீதிமன்றம் தீர்ப்பு:

# கால் நூற்றாண்டு போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. அறிக்கை!

*சென்னை, நவ. 20-*

*“ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு கால் நூற்றாண்டு போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி” என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. கூறியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை 1994 ஆம் ஆண்டு ஜனவரி 1 இல் தொடங்கப்பட்டது. சுற்றுச்சூழலை நாசப்படுத்தியும், தூத்துக்குடி மக்களின் உடல் ஆரோக்கியத்தையும் கெடுத்ததோடு வேளாண் நிலங்களையும் பாழ்படுத்திய ஸ்டெர்லைட் நச்சு ஆலையை மூட வேண்டும் என்று 1996ஆம் ஆண்டில் இருந்து மறுமலர்ச்சி தி.மு.க. மக்கள் மன்றத்திலும், நீதிமன்றத்திலும் தொடர்ந்து போராடி வந்தது. சென்னை உயர் நீதிமன்றத்தில் ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவோடு நானும் இணைந்து மனு தாக்கல் செய்தேன்.*

**7 மணி நேரம் வாதிட்டேன்!**

*இந்த வழக்கில் ஸ்டெர்லைட் ஆலையை மூடுமாறு 1998 நவம்பர் 23 இல் சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால ஆணை பிறப்பித்தது. தலைமை நீதிபதி லிபரான் மற்றும் நீதி அரசர் பத்மநாபன் அமர்வில் 1998 டிசம்பர் 9, 10, 11 ஆகிய தேதிகளில் 7 மணி நேரம் நான் வாதங்களை எடுத்து வைத்தேன். இந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் எலிபி தர்மராவ், பால் வசந்தகுமார் ஆகியோர் அடங்கிய அமர்வு 28. 09. 2010 அன்று ஸ்டெர்லைட் ஆலையை மூடச்சொல்லி தீர்ப்பளித்து. அதனை எதிர்த்து ஆலை நிர்வாகம் அந்தத் தீர்ப்புக்கு உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால தடைபெற்றது. அதன் பிறகு ஸ்டெர்லைட் வழக்கு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்து இருபது அமர்வுகள் நடந்த போது நானும் வழக்கு விசாரணையில் பங்கேற்றேன்.*

*2013 மார்ச் 23ஆம் தேதி ஸ்டெர்லைட் ஆலை யில் இருந்து அதிகாலையில் நச்சு வாயு வெளியேறியதால் நடைபயிற்சி சென்றவர்களும், பொதுமக்களும் மயங்கி விழுந்தனர். இதனை அடுத்து மார்ச் 30ஆம் தேதி, ஸ்டெர்லைட் ஆலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் கொடுத்திருந்த அனுமதியை ரத்து செய்து, மின்சாரம் மற்றும் தண்ணீர் இணைப்பையும் தமிழ்நாடு அரசு துண்டித்தது. உச்சநீதிமன்ற நீதிபதிகள் பட்நாயக், கோகலே அமர்வு 2013 ஏப்ரல் 2 ஆம் தேதி, ஸ்டெர்லைட் ஆலை தொடர்ந்து இயங்கலாம் என்றும், சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பை ரத்து செய்தும் தீர்ப்பளித்தது.*



*ஆனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுமானால் எதிர்காலத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு எந்த தடையும் இல்லை என்று தீர்ப்பில் குறிப்பிட்டது. மேலும் ஸ்டெர்லைட் நிர்வாகம் நிலம், நீர் பாதிப்புகளுக்காக ரூபாய் 100 கோடி வங்கியில் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பு வந்த ஏழாம் நாள் 2013 ஏப்ரல் 9 ஆம் தேதி தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் ஸ்டெர்லைட்டை எதிர்த்து நான் வழக்கு தொடர்ந்தேன். மேலும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல் செய்தேன். ஆனால் அது உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப் பட்டது.*

*அதன் பின்னர் தென் மண்டல பசுமை தீர்ப்பாயத்தில் நீதிபதி சொக்கலிங்கம் முன்னால் நடந்த விசாரணையில் ஸ்டெர்லைட்டை எதிர்த்து ஒன்றரை மணி நேரம் வாதங்களை முன் வைத்தேன்.*

**நீதியரசரின் பாராட்டு!**

*நீதியரசர் சொக்கலிங்கம் வெளிப்படையாகவே எனக்கு பாராட்டு தெரிவித்தார். ஆனால் திடீரென்று இந்த வழக்கு தென்மண்டல பசுமை தீர்ப்பாயத்தி லிருந்து இந்திய பசுமை தீர்ப்பாயத்தின் தலைமை அமர்வுக்கு மாற்றப்பட்டது. அங்கு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதந்திர குமார் அமர்வில் நடந்த விசாரணையில் தொடர்ந்து பங்கேற்று வாதாடினேன்.*

*ஸ்டெர்லைட் ஆலையின் நச்சு வாயுவினால் புற்றுநோய், நுரையீரல் தொற்று நோய், சரும நோய் இவற்றால், தூத்துக்குடி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை சாதகமாக பயன்படுத்தி ஸ்டெர்லைட் நிர்வாகம் ஆலையை மேலும் இரண்டு மடங்கு விரிவாக்கம் செய்ய முனைந்தது. இதனை எதிர்த்து குமரெட்டியா புரம், தெற்கு வீரபாண்டிய புரம், சில்வர் புரம், மற்றும் தூத்துக்குடி மாநகர மக்கள் கொந்தளித்துப் போராடினர்.*

**காக்கை - குருவிகளை போல சுட்ட காவல்துறை!**

*போராட்டத்தின் நூறாவது நாளான 2018 மே 22 அன்று ஆயிரக்கணக்கான மக்கள் ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் நோக்கி பேரணி சென்ற போது, எடப்பாடி பழனிசாமி அரசு காவல்துறையை ஏவி, காக்கை குருவிகளை சுடுவது போல அவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியது. காவல்துறையின் நரவேட்டைக்கு 13 அப்பாவி மக்கள் உயிர்கள் பறிபோயின.*

*அதன் பிறகு ஏற்பட்ட மக்கள் கொந்தளிப்பால், அ.தி.மு.க. அரசு ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதாக 2018 மே 28ஆம் தேதி ஆணைப் பிறப்பித்தது.*

*ஆனால் அந்த ஆணையில் தமிழ்நாடு அரசு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் காற்று மாசுபடுதல், தண்ணீர் மாசுபடுதல் குறித்த சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் ஸ்டெர்லைட் ஆலைக்கு முன்பு கொடுக்கப்பட்ட அனுமதி காலாவதி ஆகிவிட்டது. மீண்டும் புதிய அனுமதி கொடுக்கவில்லை என்பதால் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 48ஆவது பிரிவின் அடிப்படையில் ஆலை நிரந்தரமாக மூடப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டி ருந்தது. இந்த ஆணையை எதிர்த்து ஸ்டெர்லைட் நிர்வாகம் தீர்ப்பாயத் திலோ அல்லது நீதிமன்றத் திலோ மேல்முறையீடு செய்து அனுமதி பெற்றால் தமிழ்நாடு அரசு ஆணை செல்லுபடி ஆகாது. ஆலையை மீண்டும் திறக்க வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.*

*இதன் காரணமாக ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட கொள்கை முடிவு எடுக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தேன். வழக்கு 13.06.2018 அன்று நீதியரசர்கள் செல்வம், பஷீர் அகமது அமர்வில் விசாரணைக்கு வந்த போது, எனது மனுவை ஏற்றுக் கொண்டு ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு தமிழ்நாடு அரசு கொள்கை முடிவு எடுத்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று நீதிபதிகள் அறிவுறுத்தினர்.*

*இதனிடையே டெல்லியில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தலைமை அமர்வில் ஸ்டெர்லைட் வழக்கு நடந்த போது, என்னையும் ஒரு தரப்பாக சேர்க்கக் கோரி மனு அளித்தேன்.*

**கடுமையான போராட்டம்!**

*உச்சநீதிமன்றம் முன்னாள் நீதிபதி கோயல் முன்பாக கடுமையாகப் போராடி எனது வாதங்களை எடுத்துரைத்தேன்.*

*ஸ்டெர்லைட் நச்சு ஆலையை தொடர்ந்து இயக்குவதற்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் 15.12.2018 இல் அனுமதி அளித்தது. உச்ச நீதி மன்றத்தில், நீதி அரசர்கள் ரோகிங்டன் நாரிமன், நவீன் சின்கா அமர்வில் ஸ்டெர்லைட் வழக்கு இறுதி விசாரணை நடைபெற்றது. அப்போது 2019 பிப்ரவரி 07 ஆம் தேதி ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்று 40 நிமிடங்கள் எனது வாதத்தை ஆணித்தரமாக எடுத்து வைத்தேன்.*

*2019 பிப்ரவரி 18 அன்று உச்ச நீதிமன்றம் ஸ்டெர்லைட் ஆலையை மூட உத்தரவிட்டு தீர்ப்பு அளித்தது.*

*இத்தீர்ப்பை எதிர்த்து ஸ்டெர்லைட் நிர்வாகம் மனு தாக்கல் செய்த போது, சென்னை உயர் நீதிமன்றம் செல்லுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.*

*சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்த இந்த வழக்கில் 2020 ஆகஸ்ட் 18ஆம் தேதி நீதிபதிகள் சிவஞானம் மற்றும் பவானி சுப்பராயன் ஆகியோர் அமர்வு நாசக்கார ஸ்டெர்லைட் நச்சு ஆலையை நிரந்தரமாக மூடுமாறு தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் சார்பில், ஸ்டெர்லைட் மீதான தடை உத்தரவை நீக்கி மீண்டும் திறக்க அனுமதிக்க வேண்டும் என வேதாந்தா நிறுவனம் சார்பாக உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்பான இறுதி விசாரணை உச்சநீதிமன்றத்தின் அப்போதைய தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வில் நடைபெற்றது. இதனையடுத்து தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க அனுமதி மறுத்த சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றம் கடந்த பிப்ரவரி மாதம் (29.02.2024) அதிரடியாகத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருந்தது.*

*உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மறு ஆய்வு செய்யக் கோரி வேதாந்தா குழுமத்தின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மீண்டும் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.*

*ஸ்டெர்லைட் நிறுவனத்தின் மனு மீதான விசாரணை ஏற்கனவே தலைமை நீதிபதியாக பதவி வகித்த டி. ஒய். சந்திர சூட் மற்றும் நீதிபதிகள் ஜே.பி. பார்தி வாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அமர்வில் நடந்தது.*

*ஆலையை திறக்க கோரிய ஸ்டெர்லைட் மனு மீதான விசாரணை முடிவில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு நவ.16 அன்று வெளியானது.*

*அதில், “ஒரு தொழில் துறையை மூடுவது ஒரு முதல் தேர்வு அல்ல. ஆனால் வேதாந்தாவின் கடுமையான மீறல்களுடன் நீண்ட மற்றும் தொடர்ச்சியான மீறல்களும் தூத்துக்குடி ஆலையை வேறு வழியின்றி மூடும் நிலைக்கு உயர்நீதிமன்றத்தையும் சட்டப்பூர்வ அதிகாரிகளையும் தள்ளியது.*

**மக்களின் ஆரோக்கியமே முக்கியம்!**

*இந்த ஆலை நாட்டின் தாமிர உற்பத்திக்கு பங்களித்துள்ளது. அப்பகுதியில் வேலைவாய்ப்பு மற்றும் வருவாயை வழங்கி யுள்ளது என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆனாலும், நிலையான வளர்ச்சி, பொது நம்பிக்கை மற்றும் மாசுபடுத்துபவர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் ஆகியவை மிகவும் முக்கிய மானவை. இப்பகுதியில் வசிப்பவர்களின் ஆரோக்கியம் மற்றும் நலன் மிகவும் முக்கிய மானது. அவர்களின் கவலைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு மாநில அரசுக்கு உள்ளது.”*

*என்று தெரிவித்துள்ள உச்ச நீதிமன்றம் ஸ்டெர்லைட் நிறுவனத்தின் மறு சீராய்வு மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்து விட்டது.*

**கடைசி ஆணி!**

*ஸ்டெர்லைட் நச்சு ஆலை நிரந்தரமாக மூடப்பட்டு கடைசி ஆணியும் அறையப்பட்டுள்ளது.*

*இது தூத்துக்குடியை பாழ்படுத்திய ஸ்டெர்லைட் நச்சு ஆலையை எதிர்த்து கால் நூற்றாண்டு காலம் நடைபெற்ற மக்கள் போராட்டத்திற்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மன்றத்திலும், நீதிமன்றத்திலும் அயர்வும் சலிப்புமின்றி போராடியதற்கும் கிடைத்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியாகும்.*

*இவ்வாறு வைகோ எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*